
# மற்ற உலகத்தார் உங்களைத் தொடர்புகொள்ள முடியாதபடி, உங்களை நீங்களே அடைத்துக்கொண்டு (Shut off), தேவனோடு தன்னந்தனியாக வந்து விடுங்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: ஐக்கியம், பிப்ரவரி 12, 1956, பத்தி எண் 21

**நீ ஒரு கிறிஸ்தவனாக ஆகும்போது, நீ தேவனுடைய பிரசன்னத்தில் வர எவ்வளவாக ஏங்குவாய். நீங்கள் தேவனோடு சற்றுநேரம் தனிமையாக வர முடிந்து, அப்படியே கரையுடன் இணைக்கும் ஒவ்வொரு கயிற்றையும் (shoreline) கட்டவிழ்த்து விட்டு (விலகி), இரகசிய அறைக்குள் வந்து, கதவைப் பூட்டி, உங்கள் கைகளை உயர்த்தி, அப்படியே மனதில் இருப்பவற்றை பகிர்ந்து கொள்ளும் அந்த ஐக்கியத்திற்குள்** (communion) **வரும் போது**, அது உங்கள் ஜீவியத்தில் எப்படிப்பட்ட மிகப்பெரிய சந்தோஷமாக இருக்கிற ஒரு அனுபவத்தை தேவனோடு கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றை எப்பொழுதாவது கொண்டிருக்கும் ஒரு நபரும் இங்கிருக்க மாட்டார்கள். *ஓ, அங்கே அதைக் குறித்து ஏதோவொன்றுள்ளது, அது அற்புதமாயிருக்கிறது.*

நான் அங்கே உள்ளே அதைப் பெற்றிருக்கிறேன், உங்களுக்கும் கூட அந்த அனுபவம் உண்டு, **அப்படியே முழங்கால்படியிட்டு, உங்களால் இனியும் அதைத் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு, அழுதுகொண்டும், கண்ணீர் வடித்துக்கொண்டும் இருந்து, "தேவனே, என்னால்-என்னால் முடியவில்லை - இனியும் என்னால் இதைத் தாங்கிக்கொள்ள முடியாது"** என்று கூறிக் கொண்டிருத்தல்.

★★★★★



## செய்தி: ஐக்கியம், பிப்ரவரி 12, 1956, பத்தி எண் 24

24. எனவே, **ஐக்கியம் கொள்ளும் அந்த நேரத்திலும், மனதில் இருப்பவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அந்த நேரத்திலும் *(communion)*, அங்கே தான் தேவன் என்னிடம் பேசுகிறார்.** அந்தவிதமாகத்தான் அதைக் குறித்து ஆவிக்குள்ளாக நாம் விரும்புகிறோம். முழுவதுமாக ஜெபித்து, ஆவிக்குள்ளாகும்படி நீங்கள் விரும்புகிறீர்களா? உங்களால் அதைச் செய்ய முடிந்த ஒரே வழி அதுதான். **மற்ற உலகத்தார் உங்களைத் தொடர்புகொள்ள முடியாதபடி, உங்களை நீங்களே அடைத்துக்கொண்டு (Shut off), தேவனோடு தன்னந்தனியாக வந்து விடுங்கள்.** நீங்கள் ஏன் அதைச் செய்ய விரும்புகிறீர்கள் என்றால், பூமியின் மேல் அந்த முதலாவது ஜோடிகளாகிய, ஆதாமும் ஏவாளும் வந்தபோது, அவர்கள் அதைத்தான் செய்தார்கள்.

★★★★★